சென்னை தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரி மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன கூட்டரங்கில், நேற்று (31.12.2025) அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சென்னை மண்டலத்திற்கான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் ச.செல்வராஜ். முனைவர் இரா.பாஸ்கரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

போயர் சமுதாய மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்!

அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, ஜன.1-

திருச்சியில் போயர் சமுதாய நலச்சங்கம் முதலாம் ஆண்டு விழா திருச்சி மாவட்ட தலைவர் மாநில ஒப்பந்ததாரர் ரங்கசாமி தலைமையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு..

போயர் சமுதாயம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முன்னேற்றத்திற்காகத் தனி நல வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து சமுதாயத் தலைவர்கள் முதலமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்படும். காமராஜர் நகர் பகுதியில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் மக்களுக்கு, தகுதியான இடமாக இருந்தால் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் வீட்டுமனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சமுதாய மக்கள் அரசு ஒப்பந்தப் பணிகளில் (Tenders) ஈடுபடத் தேவையான தகுதிகளைப் பெற்று பதிவு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

சட்டமன்றத் தேர்தலில் சமுதாய மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்து முதலமைச்சரிடம் ஆலோசித்து, வெற்றி வாய்ப்புள்ள இடங்களில் வாய்ப்பு வழங்கக் கோரிக்கை வைக்கப்படும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, குறிப்பாகப் பெரிய கட்டிடங்கள் கட்டுவது, சாலைகள் அமைப்பது மற்றும் விவசாயப் பணிகளில் போயர் சமுதாய மக்களின் உழைப்பு மிக முக்கியமானது என்று அமைச்சர் நேரு பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் அன்பழகன், முசிறி சட்டமன்ற உறுப்பினர் காடு வெட்டி தியாகராஜன், மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர் முத்துச்செல்வம் உள்ளிட்ட ஏராளமான போயர் சமுதாய மக்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக அண்ணா காவல் அரங்கம் மைதானத்தில் அமைச்சர் ஆர்.காந்தி நேற்று முன்தினம் (30.12.2025) டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமியுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியகுழுவைவர் திருமதி.மலர்க்கொடிகுமார் குன்றத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.சரஸ்வதிமனோகரன் ஆகியோர் உள்ளனர்.

இரா.துரைராஜ் தலைமை! மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் முனைவர் த.ஜெகதீசனின் ஆய்வு நூல் –

‘முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன-மொழி உணர்வு’ எனும் நூல்!

அமைச்சர் எ.வ.வேலு வெளியிடுகிறார்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக்கொள்கிறார்!

சென்னை, ஜன.1-

சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - முனைவர் த.ஜெகதீசன் எழுதியுள்ள, “முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன-மொழி உணர்வு” எனும் நூலின் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.

3.1.2026 - சனிக்கிழமை மாலை 5.30 மணி அளவில், சென்னை - கோட்டூர்புரம் - அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் - 3-வது தளத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கு - சென்னை மாநகராட்சி 13-வது மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தலைமை வகிக்கிறார்.

வேளச்சேரி மேற்குப் பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி., பெ.மணிமாறன் எம்.சி., எஸ்.பாஸ்கரன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பச்சையப்பன் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ந.பழனிச்சாமி வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் - முனைவர் த.ஜெகதீசன் எழுதியுள்ள, “முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகளில் இன - மொழி உணர்வு” எனும் நூலினை, பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வெளியிடுகிறார்.

நூலின் முதற்படியினை - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ப.தாயகம் கவி, ஏ.எம்.வி. பிரபாகரராஜா மற்றும் வழக்கறிஞர் ஆ.சௌந்தர், டெல்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் தி.உமாதேவி, தமிழ்நாடு உயர் கல்வி மன்ற உறுப்பினர் பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிறைவாக - நூலின் ஆசிரியரும் சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளருமான முனைவர் த.ஜெகதீசன் நன்றியுரையாற்றுகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” !

02.01.2026 முதல் 14.01.2026 வரை நடைபெறும் இடங்களின் விவரம்!

அமைச்சர்– மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,ஜன.1-

“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

நாள் 2.1.26 வெள்ளிக் கிழமை 317 ஆம் நாள்

அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் மூ. விஜயகுமார்

2) வட்டம் 84 ஆ, தொடர்வண்டி சாலை, கொரட்டூர், வட்ட செயலாளர் த.வ. லால்

நாள் 3.1.26 சனிக்கிழமை 318 ஆம் நாள்

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 94, சிட்கோ நகர், வில்லிவாக்கம், வட்ட செயலாளர் சிட்கோ சேகர்

2) வட்டம் 94 அ, பாலியம்மன் கோயில் தெரு, வட்ட செயலாளர் ஆர். தீனதயாளன்

நாள் 4.1.26 ஞாயிற்றுக் கிழமை 319 ஆம் நாள்

திரு.வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 75 அ, எஸ். எஸ் புரம், 7வது தெரு, வட்ட பொறுப்பாளர் பா.பி.தாஸ்

2) வட்டம் 75, பராக்கா சாலை G5 காவல் நிலையம் பின்புறம், வட்ட கழக செயலாளர் வி.கா வெங்கடேசன்

நாள் 5.1.26 திங்கட்கிழமை 320 ஆம் நாள்

அம்பத்தூர் வடக்கு பகுதி

1) வட்டம் 81, தெற்கு பூங்கா தெரு, வெங்கடாபுரம், வட்ட செயலாளர் மு. இரகு

2) வட்டம் 80, புதூர் தாங்கல் மெயின் ரோடு, சேரன் தெரு,

வட்ட செயலாளர் வெ. இராதாகிருஷ்ணன்

நாள் 6.1.26 செவ்வாய்க்கிழமை 321 ஆம் நாள்

கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 69அ, தாந்தோன்றி அம்மன் கோயில் தெரு, அகரம், ஆனந்தன் பூங்கா அருகில் வட்ட செயலாளர் P.அதிபதி

2) வட்டம் 69, 18வது தெரு, ஜி.கே. எம் காலனி, வட்ட செயலாளர் M.J.C பாபு

நாள் 7.1.26 புதன்கிழமை 322 ஆம் நாள்

அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 90, பாடி, புதுநகர் கல்வெட்டு அருகில், வட்ட செயலாளர் நா. நெப்போலியன்

2) வட்டம் 93, வீரமாமுனிவர் சாலை, முகப்பேர் கிழக்கு, வட்ட செயலாளர் இரா.டீக்கா

நாள் 8.1.26 வியாழக்கிழமை 323 ஆம் நாள்

கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 68, சிவா விஷ்ணு ஆலயம், கார்த்திகேயன் சாலை, பெரியார் நகர் வட்ட செயலாளர் K.P ஆதவன் மணி

2) வட்டம் 70, ஜமுனா பாய் நகர், சிம்சன் எதிரில், பெரம்பூர், வட்ட செயலாளர் ப. அன்பரசு

நாள் 9.1.26 வெள்ளிக் கிழமை 324 ஆம் நாள்

துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55ஆ, எண்.1 ஆச்சாரப்பன் தெரு.தாதா முத்தியப்பன் தெரு சந்திப்பு, வட்டச் செயலாளர் ஆர். ஏ. அஸ்லாம்.

2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54, தங்க காலை தெரு, அரசு அச்சகம் அருகில், சென்னை. வட்ட செயலாளர் எம். ஜெய்சங்கர்

நாள் 10.1.26 சனிக்கிழமை 325 ஆம் நாள்

எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 77 அ, சிவராஜாபுரம், புளியந்தோப்பு, வட்ட செயலாளர் வி.அபாய்

2) வட்டம் 78அ, சூளை, அங்காளம்மன் கோயில் அருகில், வட்ட செயலாளர் ந. பாலு

நாள் 11.1.26 ஞாயிற்றுக்கிழமை 326 ஆம் நாள்

திரு.வி.க நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 74 அ, சுப்புராயன் தெரு, (மணிக் கூண்டு) அருகில், ஓட்டேரி.

வட்டக் கழக செயலாளர் ஜி. கிருஷ்ணகுமார்

2) வட்டம் 71, வடிவேலு தெரு, நெல்வயல் சாலை சந்திப்பு, பெரம்பூர்

வட்ட கழக செயலாளர் பரிமளா சுரேஷ் பாபு

நாள் 12.1.26 திங்கட்கிழமை 327 ஆம் நாள்

எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 61, மகப்பேறு மருத்துவமனை, பாந்தியன் சாலை,

வட்ட செயலாளர் S. டால்ஃபின் ஹரி

2) வட்டம் 61 அ, வேலாயுதம் தெரு, பழைய நூர்ஜகான் ஹோட்டல்,

குதிரைப்படை எதிரில் வட்ட செயலாளர் இ. மொய்தீன்

நாள் 13.1.26 செவ்வாய்க்கிழமை 328 ஆம் நாள்

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

1) வட்டம் 97, பெரியார் சாலை, P.E கோயில் வடக்கு மாடவீதி சந்திப்பு,

வட்ட செயலாளர் விக்னேஷ் சீனிவாசன்

2) வட்டம் 97 அ, சோலை மெயின் தெரு, வட்ட செயலாளர் ச. மனோகரன்

நாள் 14.1.26 புதன்கிழமை 329-ஆம் நாள்

துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54ஆ, உட்வார்ப் 3வது சந்து, வால்டாக்ஸ் ரோடு, சென்னை. வட்டசெயலாளர் ஆர்.ரவிச்சந்திரன்

2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60, நான் காவது கடற்கரை சாலை, கோபால் தெரு, சந்திப்பு, வட்டச் செயலாளர் க. கவியரசு.

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு !

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் 02.01.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில், எடப்பாடி நைனாம்பட்டியில் உள்ள, “ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்”, மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1) தைத்திங்கள் தமிழர் திருநாள் திராவிட பொங்கல்சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் குறித்து

2) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு (SIR) குறித்து.

3) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

டி.எம்.செல்வகணபதி, எம்.பி.

செயலாளர் – சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு–169, சைதாப்பேட்டை, வெங்கடாபுரத்தில் துணை மேயர் மு.மகேஷ் குமார் நேற்று (31.12.2025) தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூபாய் 3.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து தூய்மை பணியாளர்கள் நல வாரிய கார்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் காசநோய் ஊட்டசத்து பெட்டகம் தொழுநோயாளிக்கு மருத்து பெட்டகம் வழங்கி மற்றும் பல்வேறு மருத்துவ பாரிசோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் இணைந்து பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்குமாறு டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார். உடன் எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், கே.ஜி. நமச்சிவாயம், க.சம்பத், எஸ்.ராமஜெயம், எஸ்.உதயகுமார், க.பரத்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.